**இரத்தினபுரி பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல 20 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஜுன் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரத்தினபுரி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வர்த்தக அனுமதிப் பத்திர வருமானம் ரூபா 437,450 தொகையாக இருக்க வேண்டும் எனினும் ரூபா 649,700 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 212,250 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,457,555 தொகையில் ரூபா 236,095 கடன்கொடுத்தோர் பெறுமதியுடன் பதிலீடு செய்து தேறிய தொகையாகிய ரூபா 4,221,460 தொகையினை மாத்திரம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதற்கான சீராக்கல்கள் பேரேட்டுக் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் மீதி அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ)(i) ரூபா 1,568,628 தொகை பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தலின் போது அகற்றுவதற்கு மற்றும் ஏல விற்பனை செய்வதற்கு விதந்துரைந்திருந்த போதிலும் அச் செயற்பாடு மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருக்காத போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 09 இன் கீழ் இப் பெறுமதி சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டு கணக்கீடு செய்திருந்தது.

(ii) ரூபா 35,830 இற்கான கொள்வனவு செய்யப்படாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் ரூபா 1,700 தொகைக்கான சிறு உபகரணங்கள் இருப்பொன்றும் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கு மீதி ரூபா 37,530 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது செலுத்துவதற்கு இயலாமல் போன ரூபா 746,741 பெறுமதியான செலவுக் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட

வேண்டுமெனினும், அதன் பிரகாரம் செயற்படாமையால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 7,446,484 இற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

வர்த்தக அனுமதிப்பத்திர பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 193,730 இற்கான நிலுவை மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான மீதி ஒன்று தொடர்பாக பதிவேட்டின் பிரகாரம் அல்லது அப் பெறமதி அமைந்த முறை பற்றிய சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப் பிரமாண இலக்கம் 371(2) | ஏதேனும் கருமத்திற்காக பெற்றிருந்த முற்பணம் அக் கருமம் முடிவடைந்ததுடன் தீர்க்கப்பட வேண்டுமெனவும் வழங்கியிருந்த ரூபா 946,989 இற்கான முற்பணங்கள் தொடர்ந்தும் தீர்க்கப்படாத முற்பணம் என காணப்பட்டது. |
| (ii) | நிதிப் பிரமாண இலக்கம் 396 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 79,145 இற்கான 12 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாண இலக்கங்கள் 570 மற்றும் 571 | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் காலம் கடந்த வைப்புக்களை ஆதனவளிப்பு செய்ய வேண்டுமெனினும் ரூபா 3,283,572 இற்கான 45 வைப்பு மீதிகள் தொடர்பாக அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1990 அக்தோபர் 10 திகதிய பொது நிருவாக மாகாண சபை மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சு செயலாளரின் 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.13 | பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்ட வாகனத்தை கூறுவிலைகளின் நியாயத் தன்மை தொடர்பாக தகுதிவாய்ந்த இயந்திர பொறியியலாளர் ஒருவரின் அறிக்கை பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் சபையின் JCB இயந்திரத்தின் மற்றும் WPPF 5494 இலக்கங் கொண்ட கப் வண்டியின் ரூபா 265,395 தொகை மற்றும் ரூபா 357,370 இற்கான பழுதுபார்த்தல் வேலைகளுக்காக அவ்வாறு பொறியியலாளர் அறிக்கையொன்று பெற்றிருக்கவில்லை. |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் சீஏபீ/211/30 ஆம் இலக்க 2009 நவம்பர் 23 திகதிய கடிதம் | உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்காக அவர்களின் பதவிக் காலத்திற்கு மாத்திரம் வரையறைக்குட்பட்டவாறு அந்தரங்க செயலாளர் ஒருவர் சேர்க்கும் போது கவனம் செலுத்த வேண்டிய கல்வித் தகைமை பற்றியும், ஒரு மாதத்திற்கு குறைவான காலம் சேவையாற்றிய சந்தர்ப்பங்களில் படிகள் கணிப்பதற்காக பயன்படுத்தும் தகவு பொருத்த நாட்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் சேர்க்கப்பட்ட அந்தரங்க செயலாளரின் கல்வித் தலைமை அல்லது சேவையாற்றும் நாட்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2015 ஆண்டின் போது ரூபா 101,640 இற்கான படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 7,479,511 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,820,702 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாட்டு மிகை ரூபா 11,341,191 தொகையினால் குறைந்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 60 சதவீதத்தினால் குறைந்துள்ளது என அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டுவரும் வரமானம் குறைந்ததும் மீண்டுவரும் செலவினமும் அதிகரித்தும் இதற்கான பிரதான காரணமாகும்.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 224 | 39 | 81 |
| வாடகை | 701 | 258 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 712 | 708 | 194 |
| ஏனைய வருமானங்கள் | 30,764 | 32,520 | 22,716 |

**2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரி மற்றும் வாடகை, சேவைக் கட்டணம் மற்றும் எழுத்தாணைக் கட்டணமும் தண்டப் பணமும் ஆகிய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம், பாதீட்டு தொகையை விட முறையே 85 சதவீதம், 63 சதவீதம், 32 சதவீதம் மற்றும் 23 சதவீதம் குறைவடைதல் காட்டப்பட்டிருந்தது.

**2.3.3 வீத வரி**

வீத வரி அறவீடு செய்யக் கூடிய முன்னேறிய பல ஊர் பிரதேசங்கள் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்டதுடன் அவ் ஊர்களில் முன்னேறிய ஊர் பிரதேசங்கள் என பகிரங்கப்படுத்தி வீத வரி அறவீடு செய்யக் கூடியதாக இருந்தும் கூட உத்தேசித்துள்ள வீத வரி பிரதேசங்கள் வரைதல் தவிர அதற்கு அப்பால் முன் நடவடிக்கை எடுக்கப்படாமையால் அதிகரிக்கக் கூடிய பிரதான வருமான மூலம் ஒன்றினை அதிகரித்தல் தொடர்ந்தும் தாமதமாகியிருந்தது.

**2.3.4 ஏனைய வருமானங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வரி அறவிடப்பட வேண்டிய வியாபாரங்களை இனங்காணும் நோக்குடன் வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 ஆண்டுடன் ஒப்பாக 2015 அக்தோபர் 09 திகதி வரை வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் 346 நிலுவை சந்தர்ப்பங்கள் காணப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 139 வரி செலுத்துவோர்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவை ஏக்கர் வரி ரூபா 27,006 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் படி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் இருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருடாந்த வருமானத்தில் 1% சதவீதமான வரியினை அறவீடு செய்யக் கூடியதாக இருந்தும் கூட சபையின் அதிகாரப் பிரதேதசத்தில் அமைந்துள்ள சுற்றுலா ஹோட்டல்களில் இருந்து மீளாய்வாண்டிற்கான மேற்கூறிய வரியினை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படும் நிரந்தர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக மற்றும் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைபேசி மற்றும் தொலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பாக விரிவான பதிவேடு

ஒன்று பேணப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான போதியளவு வருமானம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் பல காணப்பட்ட போதிலும், அத் தரிப்பிடங்களில் வசதிகளை அதிகரித்து சட்டரீதியாக நிறுவி வருடாந்தம் அல்லது மாதாந்தம் முச்சக்கர வண்டிகளில் இருந்து கட்டணம் ஒன்றினை அறவீடு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 செப்தெம்பர் மாதம் முதல் 2015 திசெம்பர் மாதம் வரையான முத்திரைக் கட்டண பட்டோலை தருவித்திருக்கவில்லை. அத்துடன் அப் பணத்தை அறவீடு செய்வதில் நீண்ட தாமதம் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை நீதிமன்றத் தண்டப்பணப் பட்டோலைகளை தருவித்திருக்கவில்லை. அத்துடன் அப்பணத்தை அறவீடு செய்வதில் நீண்ட தாமதம் காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் சேவையாற்றிய பதவியணி அங்கத்தவர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ரூபா 11,049 இற்கான ஊழியர் பிணை ஏதேனும் ஈடுபாட்டு பொறுப்பு இருப்பின் அவற்றை தீர்த்த பின்னர் விடுவிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்யாமல் தொடர்ந்தும் சபையில் தடுத்து வைத்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 70 மயானங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை அளவை செய்து முறையான விதமாக சபைக்கு உரித்தாக்க ஆவணப்படுத்தி எல்லைகளை அடையாளப்படுத்தி பாதுகாப்பதற்கான முறையான நடைமுறையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) வீதி விளக்குகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 335,950 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ் வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பாக முறையான நடைமுறையொன்று இனங்காண முடியாதிருந்தது. தேவைகள் தொடர்பாக இனங்காண்பதற்காக அப்பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளல், தொழிநுட்ப அலுவலரின் பூர்வாங்க விதப்புரையின்றி கொள்வனவு செய்தல் பெறுவனவு மற்றும் விநியோகத்திற்காக பதிவேடு ஒன்று முறைப்படி பேணப்பட்டிருக்காமை சபையினால் வழங்கப்பட்ட வீதி விளக்குகள் என இனங்காண்பதற்காக பொருத்தப்பட்ட வீதி விளக்குகளுக்கு முறையான இலக்கமிடும் முறைமை காணப்படாமை ஆகிய நிர்வாக பலவீனங்கள் காணப்பட்டன. அதே போல் கலற்றி அகற்றப்பட்ட திருத்தி மீண்டும் பயன்படுத்தக் கூடிய வீதி விளக்குகளை களஞ்சியத்திற்கு ஒப்படைத்தல் மற்றும் ஒப்புக்கொள்ளல் தொடர்பாக முறையான நடைமுறையொன்று அமுல் நடத்தியிருக்கவில்லை.

**3.2 பாதீட்டுக் கொடுக்கல் வாங்கல்கள்**

---

(அ) தலைவரின் கடமைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த பதிவு இலக்கம் WPDF 5494 கொண்ட கப் வண்டி பதவிக் காலம் முடிவடைந்திருந்த 2015 ஜுலை 31 திகதி அல்லது அதற்கு முன்னர் முறைப் பிரகாரம் சபைக்கு திருப்பி உரித்தாக்கப்பட வேண்டும். அவ்வாறு திருப்பி ஒப்படைக்காமல் 2015 ஆகஸ்ட் 10 திகதி வரை முன்னைய தலைவர் தொடர்ந்தும் தனது தனிப்பட்ட வேலைகளுக்காக பயன்படுத்தியிருந்ததுடன் அக் காலப்பகுதியில் 497 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்தது. வாகனத்தை சபைக்கு உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் விபத்து ஒன்று ஏற்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 265,395 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ் விபத்து தொடர்பாக அல்லது அந்த கப் வண்டியின் பழுதுபார்த்தல் தொடர்பாக தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் அப் பகுதியிலுள்ள வறிய மக்களுக்கு வினியோகிப்பதற்காக ரூபா 277,600 பெறுமதியான கூரைத் தகடுகள் மற்றும் ரூபா 156,500 தொகை பெறுமதியான 200 பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அப் பண்டங்கள் வினியோகித்தல் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடையே அப் பண்டங்கள் வழங்கும் போது நலன்பெறுவோரை தெரிவு செய்தல் பற்றிய முறையான செயற்பாடு ஒன்றினை இனங்கண்டிருக்கவில்லை எனவும் அப் பண்டங்கள் வினியோகித்த பின்னர் குறிப்பிட்ட கருமத்திற்காக அப் பண்டங்கள் பயன்படுத்தப்பட்டதென தொடர் நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் கதிரை கொள்வனவு செய்தல் தொடர்பாக முறையான கூறுவிலை கோரப்படல் மேற்கொள்ளப்படனவா என தெளிவாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிருவாகம்**

---

(அ) மீஹிடிய பாதையினை கொங்கிரீட் பண்ணுதல் கட்டம் II இற்கான சபை நிதியத்தினால் ரூபா 1,500,000 இற்கான வேலை மதிப்பீடு ஒன்றின் மீது 900 அடி நீளம், 8 அடி அகலமான பாதையின் 05 அங்குல கனத்தில் கொங்கிரீட் பண்ணுவதற்காக 2015 மே 05 திகதி 03 மாத உடன்படிக்கை காலத்திற்காக ரூபா 1,483,843 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனைத் தினமாகிய 2015 அக்தோபர் 16 திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,449,142 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

வேலைத் தளத்தை மேற்பார்வை செய்த தொழிநுட்ப உத்தியோகத்தர் மேற்கூறிய நிர்மாண வேலைக்காக 06 இடங்களில் பாதையை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது அவ் இடங்கள் கனம் முறையே 3¾'' , 4½'' , 2¾'' , 2¼'' , 2¾'' , 4¾'' அளவுகளில் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதையின் சராசரி கனம் 3.45 அங்குலங்களாகும். அதன் படி மேற்கொள்ளப்படாத கொங்கிரீட் வேலைகளுக்காக ரூபா 406,720 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைப் பகுதியும் உரிய நியமத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. காயப்படுத்திப் பரிசோதனை மேற்கொண்ட எந்த இடங்களிலும் ABC கலவையை காட்டுவதற்கு தொழிநுட்ப அலுவலருக்க முடியாதிருந்தது. அதன் பிரகாரம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 61,180 இற்கான தொகை உட்பட மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 467,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் இந்த நிர்மாண வேலைக்காக சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த ரூபா 1,449,492 இற்கான செலவு விளைவற்ற செலவு

ஒன்றெனவும், உரிய நிதியத்தில் காணப்படாத நிர்மாண வேலை ஒன்றெனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சப்ரகமுவ மாகாண சபை நிதியேற்பாடுகளின் கீழ் சபையினால் செயற்படுத்திய ரூபா 4,051,407 தொகை பெறுமதியான 15 நிர்மாண வேலைகள் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு 2005, 2006, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளின் போது கொடுப்பனவு மேற்கொண்ட போது அப் பில்பத்திரங்கள் மாகாண சபையினால் அங்கீகரிப்பதற்கு முன்னர் சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு முற்பணக் கொடுப்பனவு என காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தியிருந்த முற்பணமாகிய ரூபா 1,066,815 தொகை மாகாண சபையினால் மீளளிப்பு செய்யாமையால் கணக்காய்வுத் திகதியாகிய 2015 அக்தோபர் 08 திகதி வரை அம் முற்பணத்தை தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

55 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 5,282,246 இற்கான மொத்த நிதி ஏற்பாடுகளும் எதுவித தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைத்து அதற்கான தேவையான வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த நிருவாகம்